Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 46 of 2024

DATE : 22.05.2025

Depositions of witness for Prosecution

PW:2

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பாலமுருகன் | Caste | |
| Father/Husband's Name | சக்திவேல் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22th day of May 2025
(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை : –**

1) நான் அக்கனாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டர் ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 13.12.2022 ம் தேதி சுமார் 2.45 மணிக்கு நானும், எனது சித்தப்பாவும் அக்கனாபுரம் பேருந்து நிறுத்தத்தில் பேசிக் கொண்டிருந்த போது அப்போது கிழக்கில் இருந்து மீனாம்பிகை பயணிகள் வாகனம் அக்கனாபுரம் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி சோலையம்மாள் என்பவர் தம்பிபட்டி செல்வதற்காக பேருந்தின் பின்புற படிக்கட்டில் ஏறினார். அப்போது பேருந்து ஓட்டுநர் கவனக்குறைவாக பேருந்தை இயக்கியதால் சோலையம்மாள் நிலைத் தடுமாறி கீழே விழுந்து விட்டார். விழுந்ததில் அவருக்கு பின்புற தலை மற்றும் காலில் காயம் ஏற்பட்டது. அவருடைய உறவினர் தமிழரசனுக்கு நான் தொலைபேசி மூலம் தகவல் சொன்னேன். 108 ஆம்புலன்ஸ் மூலம் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். மேல் சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது சோலையம்மாள் இறந்து விட்டார். இந்த விபத்து சம்பந்தமாக அசா.1 புகார் கொடுத்தாகத் தெரியும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/—எம்.இராமநாதன்/—
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு